செ.வெ.எண்: 54 நாள்: 22.03.2017

பத்திரிக்கைச் செய்தி

## மின்னணு பணபரிமாற்றம் பற்றிய விழிப்புணர்வு பிரச்சாரம்

அன்றாடம் நம் பழக்கத்திலுள்ள பாரம்பரிய பண பரிமாற்ற முறையை முற்றிலும் தவிர்த்து, அதற்கு பதிலாக மின்னணு முறையில் பண பரிமாற்றத்தினை செயல்படுத்துவதற்கு மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதனுடைய ஒரு பகுதியாக மின்னணு பணபரிமாற்றம் பற்றி முழுமையான விபரங்களை திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள பொது மக்களிடையேயும் விரிவாக கொண்டு செல்வதற்காக விழிப்புணர்வு பிரச்சாரம் திருநெல்வேலி மாவட்டத்தில் 22-03-2017 முதல் 28-03-2017 வரை ஒரு வார காலம் நடைபெறவிருக்கிறது.

22-03-2017 அன்று காலை 09-30 மணியளவில் திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கருணாகரன் இ.ஆ.ப அவர்கள் இந்த விழிப்புணர்வு பிரச்சார ஊர்தியினை கொடி அசைத்து துவக்கி வைத்தார். மாவட்ட ஆட்சித் தலைவர் தமது துவக்க உரையில் "இந்திய அரசு மின்னணு இந்தியா (DIGITAL INDIA) என்ற திட்டத்தின் கீழ் நேரடி பணபரிமாற்றத்தை முற்றிலும் நீக்க நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. மின்னணு பணபரிமாற்றம் என்ற புதிய முறையில் முன்பு போல பழைய ரூபாய் நோட்டுக்களை நாம் நேரடியாக கையாளத் தேவையில்லை. மின்னணு முறையில் பணபரிமாற்றம் செய்ய ஐந்து வெவ்வேறு முறைகள் உள்ளன" என்று கூறினார்.

மேலும் "சாதரண ஏ.டி.எம் மையங்களில் நாம் உபயோகபடுத்தும் வங்கி அட்டை முறையிலும், வயதான முதியவர்கள் தங்கள் ஆதார் எண்ணைக் கொண்டும், நம் கைபேசியில் பீம் ஆப் (BHIM APP) என்ற செயலி மூலமும், இ-வாலட், QR Code என்ற முறைகளிலும் பணமற்ற பரிமாற்றத்தை எளிதில் செய்து கொள்ளலாம்" என்றார்.

மேலும் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள வணிகர்கள், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் கிராம பொது மக்கள் ஆகிய அனைவரும் தங்கள் பகுதிக்கு வரும் பிராச்சார விழிப்புணர்வு முகாமில் கலந்து கொண்டு தங்கள் சந்தேகங்களை கேட்டு தெளிவு பெற்றுக்கொள்ள வேண்டும் என கேட்டுக் கொண்டார். பொது மக்கள் அனைவரும் மேற்கூறிய ஐந்து முறைகளில் குறைந்த பட்சம் ஏதாவது ஒரு முறையை நல்ல முறையில் தெரிந்து கொண்டு இனி வரும் காலங்களில் அந்த புதிய முறையில் பணமில்லா பரிவர்த்தனையை செய்ய வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

இதன் துவக்க விழாவில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. பூ. முத்துராமலிங்கம், மாவட்ட தகவலியல் அலுவலர் திரு. தேவராஜன், கூடுதல் மாவட்ட தகவலியல் அலுவலர் திரு. ஆறுமுகநயினார், நேர்முக உதவியாளர் (பொது) திரு. இராமசுப்பிரமணியன் மற்றும் அலுவலக ஊழியர்களும் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை தேசிய தகவலியல் மைய ஊழியர்கள் செய்திருந்தனர்.

# மின்னணு விழிப்புணர்வு முகாம், திருநெல்வேலி மாவட்டம்

| தேதி | நாள் | இடம் |
|---|---|---|
| 22-03-2017 | புதன் | காலை 9:30 மணிக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கொடியசைத்து விழாவினை தொடக்கி வைக்கிறார்கள். |
| | | திருநெல்வேலி பத்திரிக்கையாளர்கள் சங்கம், |
| | | வட்டாட்சியர் அலுவலகம், திருநெல்வேலி |
| | | திருநெல்வேலி ரயில்வே நிலையம் |
| 23-03-2017 | வியாழன் | அரசினர் பொறியியல் கல்லூரி வளாகம், திருநெல்வேலி |
| | | நாங்குநேரி பேருந்து நிலையம் |
| | | வள்ளியூர் பேருந்து நிலையம் |
| 24-03-2017 | வெள்ளி | இராதாபுரம் பேருந்து நிலையம் |
| | | வடக்கன்குளம் பேருந்து நிலையம் |
| | | பணகுடி பேருந்து நிலையம் |
| 25-03-2017 | சனி | சேரன்மகாதேவி பேருந்து நிலையம் |
| | | அம்பாசமுத்திரம் பேருந்து நிலையம் |
| | | தென்காசி பேருந்து நிலையம் |
| 26-03-2017 | ஞாயிறு | பாவூர்சத்திரம் பேருந்து நிலையம் |
| | | வீரகேரளம்புதூர் பேருந்து நிலையம் |
| | | ஆலங்குளம் பேருந்து நிலையம் |
| 27-03-2017 | திங்கள் | மானூர் பேருந்து நிலையம் |
| | | தேவர்குளம் பேருந்து நிலையம் |
| | | சங்கரன்கோவில் பேருந்து நிலையம் |
| 28-03-2017 | செவ்வாய் | கடையநல்லூர் பேருந்து நிலையம் |
| | | புளியங்குடி பேருந்து நிலையம் |
| | | சிவகிரி பேருந்து நிலையம் |